# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2008 / 2009
## HELD IN AUGUST - 2009

## ECS 3.21 – ECONOMICS OF POPULATION

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) கிரேக்க, உரோம காலப்பகுதியில் சனத்தொகைப் பெருக்கம் விரும்பி வரவேற்கப்பட்டமைக்கான நியாயங்களை (rationality) விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) மல்தஸின் சனத்தொகைச் சிந்தனைகள் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களைப் பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

02. சனத்தொகைக் கணிப்பீட்டில் (measurement) இடம் பெறும் பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

அ) பருமட்டான பிறப்பு வீதம்

ஆ) பருமட்டான இறப்பு வீதம்

இ) சிசு மரண வீதம்

ஈ) தேறிய குடியகல்வு வீதம்

உ) சனத்தொகை வளர்ச்சி வீதம்

(தலா 04 புள்ளிகள்)

03. சனத்தொகைப் பெருக்கத்தினால் சுற்றுச் சூழல் மீது ஏற்பட்டுவரும் பாதிப்புக்களை வளர்முக நாடுகளின் அனுபவங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

04. அ) கருவளம் என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

ஆ) கருவளத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை இனங்கண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

05. அ) சனத்தொகைப் பொருளியல் ஆய்வில் 'நம்பிக்கை வாதம்', 'அவநம்பிக்கை வாதம்' என்ற எண்ணக்கருக்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) 1960ன் பின் நம்பிக்கை வாதத்துக்கு உறுதுணையாக அமைந்த சர்வதேசப் பொருளாதார நிகழ்வுகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

06. 1970 களின் பின் உலக சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைந்து வந்தமைக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

07. 'சனத்தொகை வயது முதிர்தல்', 'சிறுவர் தங்கி நிற்றல்' என்ற எண்ணக்கருக்களை விளக்கி, அவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

08. அ) 'சனத்தொகைப் புலம் பெயர்வு' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

ஆ) கடந்த இரு தசாப்த காலத்தில், இலங்கையில் இடம் பெற்ற பல்வேறு சனத்தொகைப் புலம் பெயர்வுகளுக்கான காரணங்களை இனங்கண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

***